**சனாதிபதி நிதியம் - 2013**

---

சனாதிபதி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமான செலவினக் கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 7 ஆம் இலக்க சனாதிபதி நிதிய அதிகாரச்சட்டத்தின் 9(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் கௌரவ நிதி, திட்டமிடல் அமைச்சருக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அவ் அதிகாரச்சட்டத்தின் 9(4) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட வருமான செலவினக் கூற்று இணைப்பு 01 ஆகவும், நிதி முதலீடு செய்யப்படுவது தொடர்பான அறிக்கை இணைப்பு 02 ஆகவும் உள்ளடக்கப்பட்டு நிதியத்தின் நடவடிக்கைகள் நிர்வகிக்கப்படுவது தொடர்பான அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. ஒரு விபரமான அறிக்கை சனாதிபதி செயலாளருக்கு 2014 ஆகஸ்ட் 26 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிதியத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள கணக்காய்வுச் சான்றுகள் போதியளவும் பொருத்தமானதும் என நான் நம்புகின்றேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை சனாதிபதி நிதியத்தின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபைக்கு 1991 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டுள்ள ரூபா 250,000,000 தொகையான கடன் தொகையில் தொடர்ந்தும் பெறவேண்டிய மீதியான ரூபா 195,000,000 தொகை காணப்படுவதுடன் மீளாய்வாண்டின் இறுதித் திகதியில் அறவிடப்பட வேண்டியிருந்த வட்டித் தொகை ரூபா 286,656,164 தொகையாகக் காணப்பட்டது. 2008 ஆம் ஆண்டு முதல் இக் கடன் தொகை மற்றும் வட்டித் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்காக நிதியத்தின் நிதி விளைவு ரூபா 531,049,940 தொகையான மிகையாகக் காணப்பட்டதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 149,685,390 ஆக இருந்தது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் நிதி விளைவில் ரூபா 381,364,550 தொகையான அதிகரிப்பு காணக்கூடியதாக இருந்தது. எனினும், இந் நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்குத் தாக்கமளித்த வட்டி வருமானத்தில் உள்ளடங்கியிருந்த ரூபா 29,250,000 தொகையான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையிலிருந்து பெறவேண்டிய கடன் வட்டி பெறுவனவில் நிச்சயமற்ற நிலை காணப்பட்டது.

### 3.2 பகுப்பாய்வுரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது அபிவிருத்தி லொத்தர் சபையிடமிருந்து கிடைத்த ரூபா 2,009 மில்லியன் தொகை மொத்த வருமானத்தில் 88.18 சதவீதமாக இருந்ததுடன் இது முன்னைய ஆண்டில் கிடைத்த ரூபா 1,648 மில்லியனுடன் இணக்கஞ் செய்தபோது ரூபா 361 மில்லியன் அதாவது 21.90 சதவீத அதிகரிப்பாகும். முன்னைய ஆண்டின் போது நிதியத்தின் முதலீடு ரூபா 1,201 மில்லியன் ஆனமையால் மீளாய்வாண்டின் போது இது ரூபா 1,701 மில்லியன் வரை 41.63 சதவீத அதிகரிப்பை ஏற்பதற்கு இயலுமாகவிருந்தது.

(ஆ) நிதியத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக முன்னைய ஆண்டின் போது ரூபா 1,713 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது ரூபா 1,747 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. நிதியத்தின் செலவினம் ஏற்கப்படுகையில் முன்னைய ஆண்டிற்கு ஒப்பீடாக சமய அலுவல்கள், நலன்புரி நடவடிக்கைகள் மற்றும் விசேட செயற்திட்டங்களுக்காக ஏற்கப்படும் செலவினத்தில் முறையே 1,323 சதவீதமும், 825 சதவீதமும், 2,889 சதவீதமுமான அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. எனினும், மருத்துவ உதவிகள் மற்றும் கல்விச் செயற்பாடுகளுக்காக செய்யப்பட்ட செலவினங்கள்

கடந்த ஆண்டிற்கு ஒப்பாக முறையே 19 சதவீதமானதும் 95 சதவீதமானதுமான அளவால் குறைவடைந்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் போது நிதியத்தால் வைத்திய உதவிக் கொடுப்பனவு, கலாசார நடவடிக்கைகள், சமயச் செயற்பாடுகள், நலன்புரி நடவடிக்கைகள், கல்விச் செயற்பாடுகள், விளையாட்டு மற்றும் கலாசார நடவடிக்கைகள், உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு புலமைப்பரிசில் வழங்குதல் மற்றும் விசேட செயற்திட்டங்கள் என்பவைகளுக்காக ரூபா 851.26 மில்லியன் கூட்டுத்தொகையான செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அம்மொத்தச் செலவினத்தில் மருத்துவ உதவிக்காக ரூபா 697.53 மில்லியன் அதாவது 81.94 சதவீதம் மற்றும் வெளிநாட்டு, உள்நாட்டு புலமைப்பரிசிலுக்காக ரூபா 110.34 மில்லியன் அதாவது மொத்தச் செலவில் 12.96 சதவீதம் செலவு செய்யப்பட்டிருந்ததுடன் ஏனைய நோக்கங்களை அடைவதற்காக மொத்தச் செலவில் 5.10 சதவீதம் அதாவது ரூபா 43.39 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் வைத்திய உதவியாக 3,645 இருதய சத்திர சிகிச்சை நோயாளிகளுக்கு ரூபா 466.93 மில்லியன் தொகையும், 465 புற்றுநோய் சிகிச்சைகளுக்காக 47.96 மில்லியன் தொகையும், 318 சிறுநீரக மாற்றீடுகளுக்காக 53.37 மில்லியன் தொகையும், 683 ஏனைய சிகிச்சைகளுக்காக 129.27 மில்லியன் தொகையும் செலவிடப்பட்டிருந்தன. முன்னைய ஆண்டின் போது 6,209 நோயாளிகளுக்காக செலவிடப்பட்ட ரூபா 857.64 மில்லியன் தொகையுடன் ஒப்பிட்டபோது நோயாளிகள் 1,098 பேராகவும் செலவினம் ரூபா 160.11 மில்லியனினாலும் குறைவடைந்திருந்தது.

(இ) நாட்டின் 09 மாகாணங்களும் உள்ளடங்கும் வகையில் க.பொ.த (உயர் தரம்) இல் உள்ள 18,224 மாணவர்களுக்கான புலமைப்பரிசிலுக்காக மீளாய்வாண்டின் போது ரூபா 109.34 மில்லியன் செலவிடப்பட்டிருந்ததுடன் வெளிநாட்டுப் புலமைப்பரிசிலொன்றிற்காக ரூபா 1 மில்லியன் செலவிடப்பட்டிருந்தன.

### 4.2 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிறுநீரக நோயாளி ஒருவருக்காக சத்திரசிகிச்சை ஒன்று செய்யப்படுவதற்காக நிதியத்திலிருந்து அங்கீகரிக்கப்பட்ட ரூபா 300,000 தொகையான பணம் செலுத்தப்படுவதற்கு முன்னர் நோயாளி இறந்தமையால் அவரில் தங்கி வாழ்பவர்களான இரு பிள்ளைகளுக்கும் அத் தொகை வழங்கப்படுவதற்கு நிலையான வைப்புக் கணக்கொன்றை ஆரம்பித்து வழங்குவதற்கு 2011 ஆகஸ்ட் 10 ஆம் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும், அத் தேவைப்பாட்டை நிறைவேற்றுவதற்காக நிதியத்திற்கு 02 ஆண்டுகளும் 03 மாத காலமும் கடந்திருந்தன. ஆகையால் அக் காலப்பகுதியின் போது பெறுவதற்காக இருந்த ரூபா 60,000 தொகையான வட்டி வருமானம் அவர்களுக்கு கிடைக்கப்பெறாது போயிற்று.

(ஆ) 2013 ஆம் ஆண்டின் போது உயர் தர பரீட்சைக்குத் தோற்றிய சபரகமுவ மாகாணத்தின் நிவிதிகல கல்வி வலயத்தின் புலமைப்பரிசில் பெறுனர்களுக்கு

மாணவ உதவுதொகையின் இரண்டாம் கட்டம் பரீட்சைக்கு முன்னர் வழங்கப்படுவதற்குத் தவறியிருந்தது. இத்தகைய நடவடிக்கைகளினால் புலமைப்பரிசில் வழங்கப்படுவதன் நோக்கத்தை எய்த முடியாதிருந்தமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது.

(இ) மத்திய மாகாணத்தின் புலமைப்பரிசில் பெயர்ப் பதிவேட்டில் உயர் தரத்தைக் கற்பதற்கு தகைமையற்ற ஐந்து மாணவர்கள் உள்ளடக்கப்பட்டதன் மூலம் தகைமையுள்ள ஐந்து மாணவர்களுக்கான சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது.

(ஈ) நிதியத்தால் ஒரு நபருக்கு நிதியுதவியாக மாதாந்த வட்டி மாத்திரம் வழங்கப்படும் நோக்கில் தேசிய சேமிப்பு வங்கியில் அவரது சொந்தப் பெயரில் ஆரம்பிக்கப்பட்டிருந்த ரூபா 50,000 தொகையான நிலையான வைப்பு மீளாய்வாண்டின் போது நிதியத்திற்கு அறிவிக்காது காசாக்கப்பட்டு அம் மொத்தத் தொகையும் அவரால் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்த போதிலும் அத் தொகையை மீள அறவிடப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 5. பாதீட்டுக் கட்டுப்பாடு

நிதியத்தின் மீளாய்வாண்டின் வருமானம் மற்றும் செலவினங்கள், உள்ளவாறான பெறுமதிகள், அங்கீகரிக்கப்பட்ட பாதீட்டுப் பெறுமதிகளுடன் ஒப்பிடப்படுகையில் 23 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமான நிதிக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு நலிவுகள் அவ்வப்போது நிதியச் செயலாளருக்கு சுட்டிக்காட்டப்பட்டிருந்தது. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) நிதியப் பயன்பாடு
(ஆ) பெறவேண்டிய பணம்

**பின்னிணைப்பு – 01**

**வருமான, செலவினக் கூற்று**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதியத்தின் வருமான, செலவினம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடப்பட்டுக் கீழே தரப்பட்டுள்ளன.

| | திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான | | | |
|---|---|---|---|---|
| | 2013 | | 2012 | |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| **வருமானம்** | | | | |
| பங்களிப்புப் பெறுவனவு | 63,506,485 | | 59,758,878 | |
| வட்டி வருமானம் | 205,855,975 | | 155,469,134 | |
| அபிவிருத்தி லொத்தர் சபையிலிருந்தான பெறுவனவு | 2,009,375,000 | 2,278,737,460 | 1,648,471,001 | 1,863,699,013 |
| **செலவினம்** | | | | |
| கணக்காய்வுக் கட்டணம் | 150,000 | | 150,000 | |
| காகிதாதிகள் | 13,500 | | - | |
| சட்டச் செலவினங்கள் | 3,000 | | - | |
| மருத்துவ உதவிக் கொடுப்பனவு | 697,529,990 | | 857,641,805 | |
| கலாசார அலுவல்கள் | 1,075,000 | | 7,385,000 | |
| சமய நடவடிக்கைகள் | 9,250,000 | | 650,000 | |
| நலன்புரி நடவடிக்கைகள் | 5,658,250 | | 611,750 | |
| கல்வி நடவடிக்கைகள் | 500,000 | | 10,200,000 | |
| விளையாட்டு கலை நடவடிக்கைகள் | 3,000,000 | | - | |
| புலமைப் பரிசில் முறைமையின் செலவினம் | 110,344,000 | | 102,447,038 | |
| மஹாபொல உயர் கல்வி நிதியத்திற்கு 50% பங்களிப்பு | 896,255,500 | | 734,128,030 | |
| விசேட செயற்திட்டம் | 23,908,280 | 1,747,521,020 | 800,000 | 1,714,013,623 |
| செலவினத்திற்கு மேலான வருமான மிகை | | 531,049,940 | | 149,685,390 |

**பின்னிணைப்பு – 02**

## நிதியத்திற்குரிய நிதி முதலீடு தொடர்பான கூற்று

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதியத்தின் நிதி முதலீடு தொடர்பான விபரம் பின்வரும் அட்டவணையில் காண்பிக்கப்பட்டுள்ளது.

| முதலீட்டு வகை | 2013 சனவரி 01 இல் உள்ளவாறான மீதி | 2013 ஆண்டின் போதான முதலீடு | 2013 ஆம் ஆண்டின் போதான மீளல்கள் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| தேசிய சேமிப்பு வங்கியில் நிலையான வைப்பு | 820,585,000 | 209,515,000 | - | 1,030,100,000 |
| மக்கள் வங்கியில் நிலையான வைப்பு | 15,000,000 | - | 15,000,000 | - |
| இலங்கை வங்கியில் நிலையான வைப்பு | 45,000 | 305,710,000 | - | 305,755,000 |
| அபிவிருத்தி லொத்தர் சபையில் முதலீடு | 2,200,000 | - | - | 2,200,000 |
| திறைசேரி நிர்வாகக் கடன் | 363,375,000 | - | - | 363,375,000 |
| | 1,201,205,000 | 515,225,000 | 15,000,000 | 1,701,430,000 |